www.tamilarangam.net

# தமிழீழ விடுதலைப் புலிகள்

# Liberation Tigers of Tamil Eelam

## பல்கலைக்கழக மாணவர்களுக்கு-----

28-11-86

பல்கலைக்கழக மாணவர்களே, உங்களது போராட்டம் உச்சக்கட்டமடைந்து, சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டமாக பரிணமம் பெற்று, இன்று பத்தாவது நாளாக போராட்டம் தொடர்ந்து இடம்பெற்று வருவதனை சகலரும் அறிவர். மாணவர்களது இப்போராட்டத்தை மதித்து, இது ஒரு போராட்டத்திற்குள் போராட்டமாக, அராஜகத்துக்கு எதிராக நடாத்தப்படுவதென்பதை அனைவரும் உணரவேண்டும். விஜிதரன் விவகாரத்தில் விடுதலை ஸ்தாபனங்கள் அனைத்தும் கைவிரித்துவிட்ட இந்நிலையில், சரியான தகவல்கள் எமக்கு கிடைக்கப்படும் பட்சத்தில் எங்கிருந்தாலும் விஜிதரனை மீட்டெடுக்க எம்மாலான முழு ஒத்துழைப்பைத் தருவோமென உறுதியளிக்கிறோம். அதேவேளை உங்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கான பதில்களையும் நாம் கூறவேண்டிய கடமை எமக்குண்டு.

1. பல்கலைக்கழகத்தில் நடந்த உண்ணாவிரதத்தில் ஈடுபட்ட சகலரதும் பாதுகாப்பிற்கு உறுதியளிக்கிறோம்:
2. கேசவன் தாக்கப்பட்டது அரசியற்காரணமென்பதை மருத்துவபீட மாணவர்கட்கு கொடுக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப் பட்டது. வேண்டுமாயின் எழுத்துருவில் அதன் பிரதி சமர்ப்பிக்கப்படும்.
3. பல்கலைக்கழக மாணவர் ஒருவர் வெளியே கைது செய்யப்பட்டால் அதுபற்றி கூடியவிரைவில் பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு அறிவிக்கப்படும்.
4. பல்கலைக்கழக வளாவிற்குள் முன்வைக்கப்படும் சித்தாந்த ரீதியான எந்தக் கருத்துக்காகவும் பல்கலைக்கழக மாணவரெவருக்கும் எதிராக வெளியே நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது. பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட அமைப்புக்கள் மூலம் மாணவர்களது கருத்துக்கள், விமர்சனங்கள் என்பவற்றை வெளியிடவும்.
5. மாணவர்களது வேண்டுகோளுக்கு மட்டுமன்றி எம்மீது சுமத்தப்பட்ட தப்பபிப்பிராயத்தை நீக்குவதற்காகவும் விஜிதரனை தேடுவதில் முழுமூச்சாக ஈடுபடுவோம்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சிக்கட்டத்தில் இன்று நின்று கொண்டிருக்கையில் சிவில் நிர்வாகம் சிதைந்து சீரற்றுள்ளதை சகலரும் அறிவர். இன்று தமிழீழத்தின் பகுதிகள் சில எம்மால் இராணுவரீதியாக பூரண கட்டுப்பாட்டினுள் கொண்டு வரப்பட்ட நிலையில், சகல நிர்வாக அமைப்புக்களையும் சீரமைப்பதற்கான முழுமுயற்சியும், படிப்படியான வளர்ச்சியுடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தமிழீழத்திற்கான அரச நிர்வாகம் அமைப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வரும் வேளையிலும், இன்று சகல இயக்கங்களும் தான்தோன்றித்தனமாக செயற்படுவதும், விடுதலையை மழுங்கடிக்கவென சில தீயசக்திகள் முயலுவதையும் காணும்போது ஒரு அரசு அற்ற தன்மை, ராஜகம் இன்றிய தன்மையாக, இன்று அராஜகமே நிலவுவதை அனைவரும் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. எனினும் விடுதலையை முன்னின்று முழுமூச்சாக முன்னெடுத்து வரும் நாங்கள்; மக்களது பூரண ஒத்துழைப்புடன், அராஜகத்தை அகற்றி ஒரு ராஜகத்தை இன்றைய நிலையில் உருவாக்க வேண்டிய கடமைப்பாட்டிலுள்ளோம். இந்நிலையை உருவாக்க வேண்டுமாயின் தீயசக்திகள் இனங்காணப்பட்டு அகற்றப்பட வேண்டும் அல்லது மக்களால் முற்றுமுழுதாக ஒதுக்கப்பட வேண்டும்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விஜிதரனின் விவகாரத்தை தொடர்ந்து உங்கள் முன்வைக்கப்பட்ட ஐந்து கோரிக்கைகளுக்கான பதில்கள் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்டு அவர்களால் நியாயமானதென ஏற்கப்பட்ட பின்னரும். இந்த ஐந்து கோரிக்கைகள் உட்பட விஜிதரனுடன் சம்பந்தப்படாத, விடுதலைப் புலிகள் அரசியல் அனாதைகளாக்கக்கூடிய; மேலும் இரு கோரிக்கைகள் வெகுஜன அமைப்பின் மூலம் எம்முன் கொண்டு வரப்பட்டு பேச்சுவார்த்தை தொடரமுடியாத சூழ்நிலைக்கு தள்ளப்பட்டது. இப்படியான சூழ்நிலைகள் முற்றுமுழுதாக எம்மை எதிர்ப்பதற்காக உருவாக்கப்படுவதை அவதானிக்கும்போது, பல்கலைக்கழக மாணவர்களாகிய நீங்களும் தீயசக்திகளின் வலைக்குள் திட்டமிட்டு விழுத்தப்பட்டிருக்கிறீர்கள் என்பதை உணரக்கூடியதாயுள்ளது.

தமிழீழத்திற்கான தயார்ப்படுத்தல்கள் முற்றுப்பெற்று வரும் இந்நிலையில், கடந்த பெங்களூர் மகாநாட்டில் தமிழீழத்தின் சார்பாக எமது தலைவர் பிரபாகரன் மட்டும் அழைக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து எம்மை மக்கள் மத்தியிலிருந்து பிரிப்பதற்கெனவும், எமது போராட்டத்தை மழுங்கடிப்பதற்கெனவும், சில தீய சக்திகள் முயலும் என்பதனையும் முன்னரே நாம் மட்டுமல்ல அரசியல் தீர்க்கதரிசனம் கொண்ட எவரும் அறிந்திருப்பர். அந்த தீயசக்தியின் செயலே இன்று தாண்டவமாடுகின்றது. இதனைக்கொண்டு நீங்களும், எமது மக்களும் குழப்பத்திற்குள்ளாகாது ஓர் தெளிவான நிலையை பேணுவீர்களேயானால் தீயசக்திகளுக்கு முகத்தில் கரிபூசுவது மட்டுமன்றி, தமிழீழ விடுதலைப் போராட்டத்தை செழுமையாக தொடர்ந்தும் வளம்படுத்தமுடியுமென்பதையும் காட்டமுடியும்.

நாம் எவ்வகையிலும் உங்களது போராட்டத்தை குழப்பப்போவதில்லை. முற்றுமுழுதான பாதுகாப்பை வழங்கவே முன் வந்துள்ளோம். கடந்த 26ம் திகதி முதல் இரவுபகலாக எமது பாதுகாப்பை நாம் வழங்கியதற்கு காரணம் தீயசக்திகள் சிலர் இப்போராட்டத்தை முறியடிப்பதற்கான முயற்சி எடுக்கப்பட்டதனாலாகும். இன்றைய நிலையில் இந்த சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் மாணவர்களுக்காக மட்டுமன்றி எம்மீது சுமத்தப்பட்ட சந்தேகங்களை நிவர்த்தி செய்யும் முகமாகவும் இருக்குமென்றே நாம் கருதுகின்றோம். இந்த உண்ணாவிரதப் போராளிகளின் தியாகத்தால் உண்மை நிலை மக்களுக்கு தெரிந்து, மாணவர்களது போராட்டம் வெற்றி பெற்று, எம்மை தூய்மையானவர்கள் என்று வெளிப்படுத்துமானால் அனைவருமே ஒன்றிணைந்து தீயசக்தியை அகற்றலாம். எனவே எமது உளமார்ந்த ஆதரவு மட்டுமன்றி பூரண பாதுகாப்பையும் வழங்கவேண்டிய கடமைப்பாட்டிலேயே நாம் உள்ளோம் என்பதை நன்கு புரிந்துள்ளோம்.

எனவே பல்கலைக்கழக மாணவர்களே; நீங்கள் தீயசக்திகளின் வலையில் வீழ்ந்திடாது, உங்களது போராட்டத்தை தொடருங்கள் கூட்டணியினரின் கொலைகளைப் போல இதுவும் என்றாவது ஒரு நாள் உண்மை வெளிவரும் ஆகவே தமிழீழ விடுதலைப் போராட்ட வழியில் இன்றுள்ள இக்கட்டான நிலையைப் புரிந்து கொண்டு, இதற்குள் தீயசக்திகளின் ஊடுருவலை ஏற்படுத்தாது சுயமாக சிந்தித்து உங்களது போராட்டத்தை நடாத்துங்கள். எனவே சந்தேகங்களை தேவையற்ற விதமாக பரப்பாது உண்மை நிலையை புலப்படுத்தும் வண்ணம் நடக்கும்படி சகலரையும் கேட்டுக்கொள்ளும் அதேவேளை உங்களது போராட்டத்தையும் ஆதரித்து பாதுகாப்பு, ஒத்துழைப்பு என்பவற்றை பரிபூரணமாக வழங்குவோம் என்றும் உறுதியளிக்கின்றோம்.

**வெல்க தமிழீழம்!**
**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்!!**

**வே.பிரபாகரன்**
**தலைவர்**
தமிழீழ விடுதலைப் புலிகள்

அரசியற்குழு,
தமிழீழ விடுதலைப் புலிகள்

வெளியீடு:-பிரச்சார வெளியீட்டு வாரியம், தமிழீழ விடுதலைப் புலிகள்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்